UNIVERSITY OF PERADENIYA

பேராதனைப் பல்கலைக்கழகம்

පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

தொடர் தொலைக்கல்வி நிலையம்

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - OCTOBER 2020

பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி) – 2020 ஒக்டோபர்

# HINDU CULTURE I / இந்துப்பண்பாடு I (HCG I)

## இந்து சமய வரலாறு - இந்தியா, இலங்கை

## History of Hinduism – India and Sri Lanka

(மூன்று மணித்தியாலம்)

இவ்வினாத்தாளில் எல்லாமாக 08 வினாக்கள் உள்ளன

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

---

01. "இந்து சமயத்தின் மூலக்கூறுகள் சிந்து வெளியிலேயே காணப்படுகின்றன" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

02. இந்துசமயத்தின் அறிவியல் வளர்ச்சிக்கு அதர்வ வேதத்தின் பங்களிப்பு பற்றி விபரிக்குக.

03. மௌரியப் பேரரசர் காலத்தில் இந்து சமயத்தில் ஏற்பட்ட பன்முக வளர்ச்சி பற்றி விளக்குக.

04. ஈழத்திலே கண்ணகி வழிபாட்டின் தோற்றம், வணக்கமுறைகள், அதன் மேனிலையாக்கம் என்பவை பற்றி விபரிக்குக.

05. இலங்கையில் ஆரியச்சக்கரவர்த்திகளின் காலத்தில் எழுந்த புராண இலக்கியங்கள் பற்றிக் கருத்துரை வழங்குக.

06. இலங்கையில் பொலனறுவைக்கால சிற்பக்கலை வளர்ச்சி பற்றிக் கருத்துரை வழங்குக.

07. இந்துசமய வளர்ச்சிக்குப் பணியாற்றிய பின்வருவோரில் **ஒருவரின்** பணிகள் பற்றி மதிப்பிடுக.

- I. ஆறுமுக நாவலர்
- II. இராமகிருஷ்ண பரமஹம்சர்
- III. தயானந்த சரஸ்வதி
- IV. சேர்.பொன் இராமநாதன்

08. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினுக்குச்** சிறுகுறிப்பு வரைக.

- I. பெரியபுராணம்
- II. ஆண்டாள்
- III. காரைக்காலம்மையார்
- IV. இந்து ஒளி
- V. திருக்கோணேஸ்வரம்

UNIVERSITY OF PERADENIYA
பேராதனைப் பல்கலைக்கழகம்
පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
தொடர் தொலைக்கல்வி நிலையம்
දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - 2020
பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி)- 2020

## HINDU CULTURE II / இந்துப்பண்பாடு –II (HCG –II )

**இந்து தத்துவ சிந்தனைகள்**

## Hindu Religious and Philosophic Thoughts

இவ்வினாத்தாளில் எல்லாமாக எட்டு (08) வினாக்கள் உள்ளன

எவையேனும் **ஐந்து** (05) வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

**(மூன்று மணித்தியாலம்)**

---

01. இந்து தத்துவங்களின் மூல ஊற்றுக்களாக இருக்குவேத தத்துவச் சிந்தனைகள் இருப்பதனை விளக்குக.

02. ஆன்மா குறித்தும் ஆன்ம விடுதலை குறித்தும் உபநிடதங்கள் குறிப்பிடும் விடயங்களை விளக்குக.

03. அறுவகைத் தரிசனங்களுள் ஒன்றாகிய சாங்கிய தத்துவத்தின் அடிப்படைக் கூறுகளை விபரிக்குக.

04. இந்துத் தத்துவ மரபில் அத்வைதம் பெறும் முக்கியத்துவத்தை எடுத்துரைக்குக.

05. மனிதனை முழுமைப்படுத்துவதில் பகவத்கீதை எவ்வகையிலான கருத்துநிலைப் பங்களிப்பை வழங்குகின்றது என்பதைத் தெளிவுபடுத்துக.

ம.ப.பா.

06. விசிட்டாத்வைதமும் சைவசித்தாந்தமும் பதி பற்றிக் கூறும் கருத்துக்களை ஒப்பிட்டு ஆராய்க.

07. திருமந்திர நூலில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சைவசித்தாந்தக் கருத்துக்களை விரிவாக விளக்குக.

08. பின்வருவோருள் எவரேனும் இருவர் இந்துதத்துவ வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளை மதிப்பிடுக.

I. பதஞ்சலி

II. உமாபதி சிவாச்சாரியார்

III. மத்துவர்

IV. காசிவாசி செந்திநாதையர்

V. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

UNIVERSITY OF PERADENIYA

பேராதனைப் பல்கலைக்கழகம்

පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

தொடர் தொலைக்கல்வி நிலையம்

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - 2020

பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி) – 2020

# HINDU CULTURE III / இந்துப்பண்பாடு III (HCG III)

## இந்துக் கலை, கட்டடக்கலை வரலாறு

## History of Hindu Art and Architecture

(மூன்று மணித்தியாலம்)

இவ்வினாத்தாளில் எல்லாமாக **09** வினாக்கள் உள்ளன

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **ஒவ்வொரு** வினாவையேனும் தெரிவு செய்து

எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

---

### பகுதி I

01. கலிங்கத்து இந்துக்கோயில்களுள் யாதாயினும் ஒன்றைத் தெரிந்து, அதன் கட்டடக்கலை அம்சங்களை விளக்குக.

02. குடைவரைக் கோயில், மலைதளி என்பவற்றை விளக்கி, தமிழகக் குடைவரைக்கோயில்களின் வளர்ச்சியினை உதாரணங்களுடன் விளக்குக.

03. 'இலங்கையில் திராவிடக் கட்டடக்கலை' எனும் தலைப்பில் கட்டுரையொன்று எழுதுக.

### பகுதி II

04. பல்லவர்காலச் சிற்பக்கலை வளர்ச்சியினை விபரித்து, மாமல்லபுரச் சிற்பங்கள் குறித்துக் கருத்துரை வழங்குக.

05. அனுராபுர காலத்துக்குரியனவாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள வெண்கலப்படிமங்களுள் யாதேனும் ஒன்றைக் குறித்துக் கலாவிமர்சனம் செய்க.

06. சித்தன்னவாசல் ஓவியங்கள் குறித்துக் கருத்துரை வழங்குக.

ம.ப.பா.

## பகுதி III

07. இலங்கைச் சைவ ஆலயங்கள், இசை வளர்ச்சிக்கு ஆற்றிவரும் பங்களிப்பினை பின்வரும் தலைப்புகளின்கீழ் விபரிக்குக.

அ) பண்ணிசை

ஆ) மங்கல இசை

இ) கதாப்பிரசங்கம்

08. இந்து சமய மரபில் கிராமிய நடனங்களின் சமய, சமூக முக்கியத்துவத்தினைத் தெளிவுபடுத்துக.

09. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றினுக்குச் சிறுகுறிப்பு எழுதுக.

அ). குப்தர்காலக் கோயில்கள்

ஆ). திராவிடக் கட்டடக்கலை அமைப்பில் தூண்கள்

இ). தட்சிணாமூர்த்தி வடிவம்

ஈ). சோழர்கால ஓவியங்கள்

உ). கஜுராஹோ சிற்பங்கள்